விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 109 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (07.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## ஊழலுக்கு எதிரான சட்டமூலம் வர்த்தமானியில்

(கொழும்பு)

ஊழலுக்கு எதிரான சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

சொத்துகள் மற்றும் பொறுப்புகளுடன் தொடர்பான ஊழல் மோசடி 11

### ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பிரச்சினைக்கு தீர்வு தராவிட்டால்

## வடக்குக்கு வரும் தென்பகுதி தலைவர்களின் சந்திப்புக்களை புறக்கணிப்போம்

### நல்லை ஆதின குரு முதல்வர்



(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு தராவிட்டால் வடக்குக்கு விஜயம் செய்யும் தென்பகுதித் தலைவர்களின் சந்திப்புக்களை புறக்கணிப்போம் என நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள 04

# திருமலையில் தமிழ் - சிங்கள மீனவர்களிடையே மோதல்

### இராணுவம், பொலிஸ் குவிப்பு



(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ் - சிங்கள மீனவர்களிடையே பாரிய மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

### 10 ரூபாயால்
## பாணின் விலை குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று முதல் பாணின் விலை 10 ரூபாயால் 11

## அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு


(கொழும்பு)

நாட்டில் இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் சதொச நிறுவனம் 3 அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைத்துள்ளது.

இதற்கமைய தகரப் பேணியில் அடைக்கப்பட்ட 425 கிராம் ரின் மீனின் 11

## மின்சாரம் தாக்கியதில் 18 வயது மாணவன் பலி

### கொக்குவிலில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் - குளப்பிட்டி பகுதியில் மின்சாரம் தாக்கி 18 வயதான மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

கொக்குவில் இந்துக் கல் 11

## இந்து பாரம்பரியத்தின் இருப்புக்கே இலங்கையில் ஆபத்து ஏற்பட்டுள்ளது

### புலம்பெயர் அமைப்புகள் பாரத பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் இந்து பாரம்பரியத்தின் இருப்பிற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக புலம்பெயர் அமைப்புகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளன.

ஏழு புலம்பெயர் அமைப்புகள் இணைந்து இந்தக் கடிதத்தை எழுதியுள்ள குறித்த கடிதத்தில், இலங்கை அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன், இந்து கலாசாரம் பாரம்பரியம், கோவில் ஆகியவற்றை குறிவைப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் அதிகளவு மதிப்பிற்குரியதாக காணப்படும் கீரிமலை பகுதியில் 04

## 40 எரிபொருள் நிலையங்களின் அனுமதிப் பத்திரம் இரத்து

(கொழும்பு)

QR குறியீட்டு முறைமையிலிருந்து விலகி செயற்பட்ட 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர 11

## ஆட்சியாளர் - பொதுமக்கள் எதிர்பார்ப்பு ஒன்றாக வேண்டும்

### ஜே.வி.பி தலைவர் அநுர



(கொழும்பு)

சரிவடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ஆட்சியாளர்களினதும் மக்களினதும் எதிர்பார்ப்பு ஒன்றாகவே இருக்க வேண்டும் என தேசிய 11

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஒத்திவைப்பு

### கடும் எதிர்ப்பையடுத்து பின்வாங்கிய ரணில் அரசாங்கம்



03ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாளில் பணி நயந்து வாழ்த்துகின்றோம்



திரு.
**சுவாம்பிள்ளை சகாயராஜா**
**Sp.Trd RC , SLTS - I**
ஆசிரிய ஆலோசகர்
கிறிஸ்தவம்
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி தெற்கு.

**சேவை விபரம்**

கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்
ஆசிரியர், 06.08.1988 - 31.12.1989
பலாலி ஆசிரியர் கலாசாலை
01.01.1990 - 31.12.1991
கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்
ஆசிரியர், 01.01.1992 - 08.09.1993
வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி
ஆசிரிய ஆலோசகர், 09.09.1993 - 07.10.2021
வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி தெற்கு
ஆசிரிய ஆலோசகர், 08.10.2021 - 06.04.2023

கல்வித் துறையில் ஆசிரியராக ஆறு ஆண்டுகள் பணியாற்றி ஆசிரிய ஆலோசகராக மிக நீண்டகாலமாக முப்பது ஆண்டுகள் எம்மோடு இணைந்து பணியாற்றிய மணிவிழா நாயகனை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-6312)

**ஆசிரிய ஆலோசகர் சங்கம்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

# அறிவித்தல்

சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் பிணக்குகளை தீர்க்கும் நோக்கில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ் வழக்கை நீதிமன்றம் 15/12/2022 தள்ளுபடி செய்யப்பட்டும், நிர்வாகமானது கடந்த 4 வருடமாக பொதுச் சபை கூட்டாமல் தன்னிச்சையாக செயற்பட்டதைத் தொடர்ந்து வலி. தெற்கு பிரதேச செயலரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் பிரகாரம் 20/03/2022 அன்று பிரதேச செயலரின் தலைமையில் கலந்துரையாடல் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அன்றைய கலந்துரையாடலின் பயனாக, 4 வருடமாகக் கூட்டப்படாத பரிபாலன சபைக் கூட்டத்தை எதிர்வரும் 09/04/2023 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 10 மணிக்கு கூட்டுமாறு அறிவிக்கப்பட்டது.

அக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவுக்கான திகதியை அறிவிக்குமாறும் கூறப்பட்டது. அன்றைய தினம் ஆவணங்கள் (நகைகள்) உரிய முறையில் ஒப்படைக்கப்படும் என அறியத் தருகின்றோம். இக் கூட்டமானது பிரதேச செயலரின் தலைமையில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

குறிப்பு : அனைத்து பரிபாலன சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவும்.

இங்ஙனம்
**பரிபாலன சபை உறுப்பினர்கள்**

(C-6316)

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 - 05 - 1952



மறைவு
06 - 04 - 2023

## வல்லிபுரம் மனோகரராசா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மனோகரராசா (06.04.2023) அன்று இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - பரிமளம் தம்பதியினரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சறோசா, கிருஷா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரா, கணேஸ், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் நாகேஸ்வரி, விக்னேஸ்வரி, சிவசக்தி, திருக்குமார், புனிதவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.04.2023 மு.ப 10.30 மணிக்கு அவரது மாமனாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் தெற்கு இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
மூன்று கோயிலடி.

(15172)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி சரபாலகிருஷ்ணன் இராஜேஸ்வரி



பிறப்பு 1949.07.20
இறப்பு 2023.04.04

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தெற்கிலுப்பைக்குளம் 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சரபாலகிருஷ்ணன் இராஜேஸ்வரி அவர்கள் 04.04.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சரபாலகிருஷ்ணனின் (ஆசாரி) அன்பு மனைவியும் கோமதியானந்தன் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும் ரமேஷ்குமார் (ஜேர்மன்), சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தினி (ஜேர்மன்), சசிகுமார் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், பரமேஸ்வரி மற்றும் ருக்மணி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் டிலக்ஷனா (ஜேர்மன்), பாலகணேஸ் (ஜேர்மன்), கிஷோதிகா (ஜேர்மன்), லிதர்ஷா, கினிதா, விதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்
தொடர்பு - 077 886 6865, 076 431 6372

(C-6313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதனை ஒத்தி வைக்கத் தீர்மானம்

## நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச

(கொழும்பு)

**பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதனை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

பல தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற்கொண்டு இந்தத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் கடந்த மார்ச் 22 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் வெளியானது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ஒழித்து, அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு எதிர்கட்சிகள், சட்டத்தரணிகள் சங்கம், சிவில் அமைப்புகள் என பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (நி)



# இலங்கை பொருளாதார மீட்சியினை மிக விரைவில் எட்டும்

## இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை வெகு விரைவில் பொருளாதார மீட்சியினை எட்டும் என இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி)

# 6.4 பில்லியன் டொலர் இழப்பீட்டை இழக்கும் நிலையில் இலங்கை?

(கொழும்பு)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் சேதத்திற்கு இழப்பீடாக 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு பெறும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்று சுற்றுச்சூழல் நீதி மையம் வலியுறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடந்த 2021 மே மாதம் நீர்கொழும்புக்கு அப்பால் ஆழமற்ற கடலில் தீப்பற்றி அழிவுற்றது.

இதனால் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புக்கு பாரிய சேதம் ஏற்பட்டது.

சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உரிய இழப்பீடு கோருவதற்கு அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என சுற்றுச்சூழல் நீதிமையம் குற்றம் சாட்டியுள்ளது. (நி)

# பண்டிகை காலத்திற்கு தேவையான உணவுப்பொருட்கள் கையிருப்பில்

## வர்த்தக அமைச்சு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்திற்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருட்களின் கையிருப்பு தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் எம்.பி அத்தபத்து தெரிவித்தார்.

பொருட்களை மறைத்து வைத்தல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட நுகர்வோரை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளைக் குறைப்பதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை மற்றும் அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் குழு, நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# திருச்சி சிறப்பு முகாமில் இருந்து 7 இலங்கைத் தமிழர்கள் விடுதலை

(சென்னை)

தமிழகம் - திருச்சி மத்திய சிறை வளாகத்தில் அமைந்துள்ள சிறப்பு முகாமில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை 7 இலங்கைத் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

வெளிநாடுகளில் இருந்து போலி கடவுச்சீட்டு மற்றும் விசா காலம் முடிந்தும் தமிழகத்தில் தங்கியவர்கள் அனைவரையும் தமிழக அரசு சிறப்பு முகாம்களில் வைத்து பராமரித்து வருகிறது.

இதன்படி, இலங்கை, கம்போடியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த மொத்தம் 117 பேர் திருச்சி சிறப்பு முகாமில் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களின் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அவர்கள் தங்களுடைய தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக சிறப்பு முகாமில் தொடர் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஏழு பேருக்கு விடுதலைக்கான உத்தரவு ஆவணங்கள் கிடைத்ததை அடுத்து அவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (நி)

# தமிழ்-சிங்கள புத்தாண்டு தினங்களில் மதுபானசாலைகள் மூடப்படும்

## கலால் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இன்று பொது விடுமுறை எனினும் நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபானக் கடைகளும் திறந்திருக்கும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, தமிழ்-சிங்கள புத்தாண்டுக்காக ஏப்ரல் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மாத்திரம் மதுபானசாலைகள் மூடப்படும் எனவும் குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# கச்சதீவை மீட்பதே எமது நோக்கம்

## இந்தியா அதிரடி

(சென்னை)

கச்சதீவை மீட்பதே தமது முதன்மையான நிகழ்ச்சி நிரல் என தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கச்சதீவை மீட்பதும் பாரம்பரிய கடற்றொழிலை மீட்டெடுப்பதும் தமிழக அரசின் முதன்மையான செயல்திட்டமாக இருக்கும் என தமிழக மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழக கடற்றொழிலாளர்கள் சர்வதேச கடல் எல்லைக் கோட்டை கடக்கிறார்கள் என்று காரணத்தைக் காட்டி இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழக கடற்றொழிலாளர்களின் படகுகளை இலங்கை அரசாங்கம் நீண்ட காலமாக தடுத்து வைத்துள்ளது. இது தமிழக கடற்றொழிலாளர் சமூகத்தினரிடையே கவலை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, கச்சதீவை இந்தியாவுக்கு திரும்பப் பெறுவதும், பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய கடற்றொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை மீட்டெடுப்பதும் தமிழக அரசின் முதன்மையான செயல்திட்டத்தில் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் நாட்டில் சமூக நெருக்கடி ஏற்படும்

## பேராசிரியர் ஜயதேவ எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுமக்களை பயங்கரவாதிகள் என் முத்திரை குத்துவதற்கு உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பயன்படுத்தப்படலாம் என பேராசிரியர் ஜயதேவ உயாங்கொட தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் சுமைகளை நலிந்தவர்கள், உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள் மீது சுமத்துகின்றது.

இதன் காரணமாக நாட்டில் பாரதூரமான சமூக நெருக்கடிகள் உருவாகும்.

ஆளும் தரப்பு தற்போது மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க விரும்புகின்றது.

அதிருப்தியாளர்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை பயன்படுத்தும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

### இதுவரை உரம் பெறாத விவசாயிகள்

# தாமதிக்காது உரத்தினை பெறுமாறு விவசாய அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)

ரி.எஸ்.பி உரத்தினை இதுவரை பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தாமதிக்காது உரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு விவசாய அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த உரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு போகத்திற்காக விவசாயிகளுக்கு உரம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த நடவடிக்கை இறுதி கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின்னர் கமநல சேவை திணைக்களங்களிலுள்ள ரி.எஸ்.பி உரம் மீண்டும் பிரதான களஞ்சியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக்கு...

செய்திக் குறிப்பில்,

சைவ சமயம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்ம கர்த்தா சபையினர், ஆதின கர்த்தாக்கள். கோவில் நிர்வாகத்தினைச் சேர்ந்தவர்களால் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில்,

ஆதீன முதல்வரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாக இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை தமிழ் மக்களுக்கு எதிராக இனரீதியான, மதரீதியான கலாசார ரீதியான ஒடுக்கு முறைகள்.

தமிழ்ப் பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் தென்னிலங்கை அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தமிழ் மக்கள், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தலைமைகள் பல தடவைகள் இதற்கெதிராகக் குரல் எழுப்பி வந்தும் இதற்கான தீர்வுகள் இலங்கை அரசிடமிருந்து கிடைக்கவில்லை.

தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளுக்குப் பின் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு வடக்குக்கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டு வடக்குக் கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கப்பட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணம் தமிழர்களின் பூர்வீக தாயகம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

அத்துடன் கொடுக்கப்பட்ட அதிகாரங்களும் இலங்கை அரசால் மீளப்பெறப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களை அடிமையாக்கும் முயற்சியாகவே நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மற்றும் ஆயுதப் போராட்டம் நிறைவடைந்த பின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர் அல்லாதோரை மிக வேகமாகக் குடியேற்றுவதும், தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்கள், கோவில்களை அழிப்பதும், தொல்பொருட் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசித் திணைக் களம் போன்றவற்றினூடாக தமிழ் பகுதிகளில் உள்ள நிலங்களை ஆக்கிரமிப்பதும் மிக வேகமாக நடைபெறும் அன்றாட நிகழ்வுகளாக நாம் கருதுகிறோம்.

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு தமிழர் தரப்பால் பலதரப்பட்ட முறைப்பாடுகள் செய்தும், நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுத்தும் எந்த விதப் பயனையும் நாம் அடைய முடியவில்லை.

இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பாக நீதி வழங்கும் முறைமையில் தமிழ் மக்களுக்கு பாரிய சந்தேகம் நிலவுகின்றது. ஒரேநாடு ஒரே சட்டம் என்ற கொள்கை பின்பற்றப்படுவதில்லை என்பதை தமிழ் மக்கள் உணர்கிறார்கள்.

இலங்கையில் மதமாற்ற தடைச்சட்டம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். சமீபத்தில் கிறிஸ்தவ போதகராகிய சக்திவேல் ஆனையிறவில் நடராசர் வடிவ சிலை வைக்கப்பட்டதைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கை விட்டதுடன் சிவபூமியாக வடக்குக் கிழக்கை சிலர் ஆக்க முயற்சி செய்கிறார்கள் என எள்ளி நகையாடியமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கைக்குரிய ஒரு சைவத்தமிழ் பெயர் சிவபூமி. அவரது கூற்றுக்கு சபையினர் முழுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தியா ஆதிச்சமயமாகிய சைவசமயத்தையும் சைவாலயங்களையும் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தென்னிலங்கையில் இருந்து வரும் அரசியல் தலைவர்கள் மேற்குறித்த பிரச்சினைகளுக்கு பதில் தராவிடில் அவர்கள் வடக்கே வரும் போது அவர்களின் சந்திப்புக்களை சைவசமயத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும். மேற்குறித்த தீர்மானங்கள் யாவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## ஐரோப்பிய மகளிர் சம்பியன்ஷிப் சுற்றுப்போட்டி சுவிட்ஸர்லாந்தில்

2025ஆம் ஆண்டில், மகளிர் ஐரோப்பிய சம்பியன்ஷிப் சுற்றுப்போட்டி சுவிட்ஸர்லாந்தில் நடைபெறும் என ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இச்சுற்றுப்போட்டியை நடத்துவதற்கு பிரான்ஸ், போலந்து ஆகிய நாடுகளும் தனித்தனியாக விண்ணப்பித்திருந்தன.

அத்துடன், டென்மார்க், பின்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகியன கூட்டாக இப்போட்டிகளை நடத்த விண்ணப்பித்தன.

இச்சுற்றுப்போட்டியை நடத்தும் நாட்டை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு ஒன்றியத்தின் (EUFA) நிறை வேற்றுச் சபை அங்கத்தவர்களிடையே போர்த்துக்கலின் லிஸ்பன் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் சுவிட்ஸர்லாந்து வெற்றியீட்டியது.

இறுதிக்கட்ட வாக்கெடுப்பில் சுவிட்ஸர்லாந்துக்கு 9 வாக்குகளும் டென்மார்க், பின்லாந்து, நோர்வே, சுவீடன் கூட்டணிக்கு 4 வாக்குகளும்கிடைத்தன. (6)

## இந்து...

காணப்பட்ட ஐந்து நூற்றாண்டு கால வரலாற்றை கொண்டுள்ள ஆதிசிவன் ஆலயம் இராணுவ ஆக்கிரமிப்பு என்ற போர்வையில் அழிக்கப்பட்டுள்ளதை ஆழ்ந்த கரிசனையுடனும் அவசரத்துடனும் நாங்கள் உங்களிற்கு தெரியப்படுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கோவில் இருந்த பகுதியில் அதனை அழித்துவிட்டு ஜனாதிபதி மாளிகையொன்றை கட்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இதன்மூலம் இந்துக்கள் இறந்தவர்களிற்கான இறுதி மரியாதைகளை முன்னெடுக்கும் பகுதியின் புனிதத்தை சீர்குலைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துமத கலாசாரம் அழிக்கப்படுவதை தடுப்பதற்காக இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை அமைக்கவேண்டும் என இலங்கை அரசாங்கத்தை இலங்கைக்கு நிதி வழங்கும் சமூகம் வலியுறுத்தவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2802

### றொக்சன்

தானாக தன் தவறை உணராத எவரையும் நாமாக திருத்திட முடியாது. அப்படி முயற்சிப்பது கல்லிடம் கதை சொல்வதற்கு சமம்



### ஜெனோபி

கறுப்பு கலர எல்லோரும் வெறுத்தாலும் ஆயுசு முழுக்க கறுப்பாகவே இருக்கனும் நினைக்கிற ஒரே விசயம்...?



வேறென்ன?.... "தலைமயிர்தான்"

### டானியேல்

கருவறையும் இருட்டு
கல்லறையும் இருட்டு
நடுவில் எதற்கு கரண்ட்டு
-இலங்கை மின்சார சபை-




### தனுசன்



இரண்டு பக்கமும் புரிதல் இருந்தால் மட்டுமே அன்பு, பாசம், ஆசை எல்லாம் ஒரு பக்கம் மட்டுமே இருந்தால் அது பெரும் தொல்லை

### பெர்கான்




### சுதாஜினி



என்னை மறந்த உறவுகளிடம் நான் கேட்பது ஒன்று தான் மீண்டும் என் வாழ்வில் வந்து விடாதீர்கள்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்களின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு அடிபணியப் போவதில்லை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

பொருளாதார மேம்பாட்டுக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் தடையான போராட்டங்களுக்கு இடமளிக்க முடியாது. தொழிற்சங்கங்களின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு அடிபணியப் போவதில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

பேருவளை பகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் எடுத்த கடுமையான தீர்மானங்களின் பயனை நாட்டு மக்கள் தற்போது பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் மாத்திரம் வலியுறுத்துகின்றன. நாட்டு மக்கள் தேர்தலை கோரவில்லை. பொருளாதாரம் ஸ்திரமடைந்த பின்னர் எந்த தேர்தலையும் நடத்தலாம், எவரும் போட்டியிடலாம்.

ஜனநாயக போராட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

ஜனநாயகம் என்ற ரீதியில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் உண்மையில் ஜனநாயக போராட்டமா? என்பதை மக்கள் ஆராய வேண்டும். மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் போராட்டங்கள் ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற முயற்சித்தார்கள்.

அது பாரதூரமான விளைவை ஏற்படுத்தியது. இனம்,மதம் என வேறுபட்டுக் கொண்டிருந்தால் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. கடந்த காலங்களை மறந்து எதிர்காலத்தை பற்றி சிந்தித்து, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.செல்வி. செல்லத்துரை கலாமதி



அன்பின் திருவுருவாய் பாசத்தின்
பிறப்பிடமாய் பண்பின்
உறைவிடமாய் என்றென்றும்
ஒளி வீசும் அகல் விளக்கே
வாழ்வின் யதார்த்தமாய்
எம்மை விட்டு பிரிந்து மூன்று
ஆண்டுகள் ஆனாலும் எம்முடன்
வாழ்ந்து கொண்டுதான்
இருக்கின்றீர் எம் நெஞ்சிருக்கும்
வரை உம் நினைவிருக்கும்
உம் ஆத்மா சாந்திக்காக எல்லாம்
வல்ல எம் குல தெய்வமாம்
கடுக்காயடி ஞானவைரவப்
பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை மடியில் 20.05.1953

ஆண்டவன் திருவடியில் 30.03.2020

(15154)

இல-3,ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

உம் பிரிவை எண்ணி ஏங்கும்
சகோதர சகோதரிகள் மற்றும்
உற்றார் உறவினர்கள்.


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-21, புன்னாலை வீதி, ஆதன இல 561, 561 A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சிவக்கொழுந்து வேலாயுதம்பிள்ளை கந்தையாவும் பெண் கோமதியம்மாவும் என யாழ். மாநகரசபை ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் காரைநகர் பாலாவோடை தற்போது கொழும்பு-13, புதுச்செட்டித்தெரு,50 இலக்கம்,சண்முகம் ஆறுமுகம் இராஜலிங்கம் 2004.03.10 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் உறுதி இல. 7233 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் காரைநகர் பாலாவோடை, தற்போது கொழும்பு-13, புதுச்செட்டித்தெரு 50ம் இலக்கம் இராஜலிங்கம் அறிவழகனுக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் இராஜலிங்கம் அறிவழகன் அவர்கள் 2019.09.30 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்தில்குமரன் முகதாவில் உறுதி இல 4357 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அமிர்தலிங்கம் முரளிதரன் அவர்களுக்கு வழங்கியுள்ளார். பின்னர் இராஜலிங்கம் அறிவழகன் அவர்களால் 2020.02.03 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்தில்குமரன் முகதாவில் உறுதி இல 4590 ஆம் இலக்க திருத்தல் உறுதி மூலம் தேசிய அடையாள அட்டை திருத்தம் பொருட்டு அமிர்தலிங்கம் முரளிதரன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "ஆலடி" நிலப்பரப்பு 8 எட்டு குழி 12.05 பன்னிரண்டு தசம் சைபர் ஐந்தும் கிணறும், வைரவர் கோவிலும், பயிர்வகைகளும்

கிழக்கு :- மானிப்பாய் வீதியும் கணபதிப்பிள்ளை ஜெயக்குமாருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்,
வடக்கு :- கணபதிப்பிள்ளை பேரானந்தத்தின் ஆதனம்,
மேற்கு :-குளம்.
தெற்கு :-கணபதிப்பிள்ளை ஜெயக்குமாருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை அமிர்தலிங்கம் முரளிதரன் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அமிர்தலிங்கம் முரளிதரன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை.யாழ்ப்பாணம்,** (சி-6301)

# இராசிபலன்

07.04.2023
பங்குனி 24, வெள்ளிக்கிழமை
பிரதமை முற்பகல் 10.58 மணிவரை

சித்திரை பிற்பகல் 2.04 மணவரை
சுபநேரம் -6.08-7.38 மணிவரை
இராகுகாலம்- 10.38-12.08 மணிவரை

சர்வதேச சுகாதார தினம்,
பெரிய வெள்ளி
சந்திராஷ்டமம் - உத்தரட்டாதி, ரேவதி

**வளவன்**

**மேஷம்**
நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்,உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்,உடல்நலன் சீராகும், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூல முண்டு.

**ரிஷபம்**
உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்**
பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள்,வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், உறவு பகை பாராமல் உதவும் நாள்,கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**கன்னி**
சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்**
பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**தனுசு**
தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்,வீட்டுக்குத்தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்**
விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், உறவினர் நண்பர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**கும்பம்**
நேற்றைய பணி யொன்று இன்னும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்,வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**மீனம்**
தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், ரோக பயமுண்டு.

துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித இயல்பு அதை நீக்குவது தெய்வீகப் பண்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு யாழில் மாபெரும் வர்த்தகசந்தை

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம் இணைந்து நடத்தும் வட மாகாண தொழிற்றுறை வர்த்தக சந்தை-2023 எதிர்வரும் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த வர்த்தக சந்தையில் நெசவு உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், உணவு உற்பத்திகள், ஆடை உற்பத்திகள், விவசாய உற்பத்திகள், தொழில் வழிகாட்டல் , வியாபார ஆலோசனை மற்றும் டிஜிற்றல் வங்கிச்சேவை ஆகியன இடம்பெறவுள்ளன. (6)

# சித்திரை விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு சித்திரை விளையாட்டு விழா ஆரம்பமாகவுள்ளது.

அதனை முன்னிட்டு முதல் நிகழ்வாக நாளை சனிக் கிழமை காலை 7 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டியும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 2 மணி முதல் கருகம்பனை பொது விளையாட்டு மைதானத்தில் கலை கலாசார பாரம்பரிய நிகழ்வுகளும் தலையணைச் சண்டை,தயிர் முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல் மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (நி-6)

# கெருடாவில் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(சாவகச்சேரி)



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதி கெருடாவில் பகுதியில் அமைந்துள்ள காணியொன்றில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை வெடிபொருட்கள் சில இனங்காணப்பட்டுள்ளன.

வெடிக்காத நிலையில் 6 எறிகணைகள் உரப்பை ஒன்றினால் மறைக்கப்பட்டு பற்றைக் காடு ஒன்றிற்குள் போடப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பாக பொதுமக்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அதன் பின்னர் பொலிஸார் ஊடாக வெடிபொருட்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

அருகில் உள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட வெடிபொருட்களே இவ்வாறு பற்றைக் காட்டிற்குள் வீசப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (நி-6-30)

# நாவற்குழிப் பகுதியில் தீப்பரவல் பயன்தரு மரங்கள் எரிந்து நாசம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் அரச திணைக்களம் ஒன்றிற்கு உரித்தான காணியில் நேற்று முன்தினம் புதன் கிழமை மதியம் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக பயன்தரு மரங்கள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

இதன்போது பனை மற்றும் தென்னை மரங்கள் பல தீயில் எரிந்து நாசமாகியுள்ள போதிலும் தீ பரவலுக்கான காரணம் கண்டறியப்பட வில்லை.

தீ மேலும் பரவிச் செல்லாமல் இருக்க இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். (நி-6-30)

# யாழில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த பொலிஸாரால் விசேட திட்டம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ். நகரில் வாகன நெரிசலைக் குறைக்கும் முகமாக பொலிஸாரினால் விசேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். நகரில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுகின்றன.

இதன்போது பொருட்கள் கொள்வனவு செய்வோர் வாகனங்களை நகரப் பகுதியில் நிறுத்துவதனால் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட போக்குவரத்து பிரிவு பொலிஸார் மற்றும் யாழ்.மாநகர சபையுடன் இணைந்து, யாழ். நகரில் பிரதான வீதிகளில் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதித்துள்ளதுடன்,

பொருட் கொள்வனவிற்கு வரும் பொதுமக்கள் வாகனங்களை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாகன தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் மாத்திரம் வாகனங்களை நிறுத்த முடியும் என ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பு விடுத்தனர்.

இவ்வாறு நகர பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களை வாகன நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்கு அனுப்பும் செயற்பாட்டில் போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் சுந்தரம் டிவகலாலாவின் நினைவேந்தல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (நி-6)

## புத்தக அரங்கவிழா

(யாழ்ப்பாணம்)

தேசியகலை இலக்கியப் பேரவையின் புத்தக அரங்க விழா எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு தலையெழுத்து மற்றும் காதலுக்கு மருந்து ஆகிய நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறும்.

சனி மற்றும் ஞாயிறுகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை புத்தகக் கண்காட்சி நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (6)


# இந்திய மீனவர்கள் 11 பேர் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் 11 பேரை ஊர்காவற்றுறை நீதிமன்றம் விடுதலை செய்ததுடன் ஒருவருக்கு சிறைத் தண்டனையும் விதித்து படகு ஒன்றை பறிமுதல் செய்தது,

கடந்த மார்ச் 23 ஆம் திகதி எல்லை தாண்டி அனலைதீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் இரு படகுகளுடன் கடற்படையினரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேலும் இரு படகில், படகு ஒன்றின் உரிமையாளர் படகில் இருந்துள்ளமையினால் படகு பறிமுதல் செய்யப்பட்டதுடன் இரண்டாவது படகு உரிமையாளர் இன்மை காரணமாக படகுரிமை கோரும் வழக்கிற்காக எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (நி-6-60)



யாழ்.இந்துக்கல்லூரி பழையமாணவ முதல்வர் சங்கத்தின் 2023-2024 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நடைபெற்றது.

## கியூ.ஆர் ஒதுக்கீடுகளை கடைப்பிடிக்காத

# 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் சேவைகளை இடைநிறுத்த தீர்மானம்

## எரிசக்தி அமைச்சர் அதிரடி

(கொழும்பு)

கியூ.ஆர் ஒதுக்கீடுகளை தொடர்ந்து கடைப்பிடிக்கத் தவறிய 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் சேவைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ட்விட்டர் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனைய அதிகார சபை மற்றும் அதிகாரிகளுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த 8 வாரங்களுக்கான எரிபொருள் இறக்குமதித் திட்டம், சுத்திகரிப்புச் செயற்பாடுகள் மற்றும் பண்டிகைக் காலத்தில் தொடர்ந்து எரிபொருள் விநியோகம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கலந்துரையாடலில், கியூ.ஆர் ஒதுக்கீட்டை மீறி தொடர்ந்து எரிபொருளை விற்பனை செய்யும் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் சேவைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் தங்கள் எரிபொருள் தாங்கிகளில் குறைந்தபட்சம் 50% கொள்ளளவு கொண்ட எரிபொருள் இருப்புகளை பராமரிக்க வேண்டும்.

நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து பவுசர்களுக்கும் ஜிபிஎஸ் கருவிகள் பொருத்தும் பணி ஏப்ரல் 15-ஆம் திகதிக்குள் நிறைவடையும், மேலும் இது எதிர்காலத்தில் தனியார் பவுசர்களிலும் செயற்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டிசம் உள்ள சிறுவர்களை எவ்வாறு குழந்தை பராயத்திலேயே அடையாளம் காண்பது?

Autism (ஓட்டிசம்) என்னும் நிலைமை மூளை வளர்ச்சியில் சமூகத் தொடர்பாடல் திறன் அபிவிருத்தியில் ஏற்படும் குறைபாட்டினால் உருவாகின்றது. குழந்தைப் பராயத்தில் 5 வயது வரை மூளையின் வெவ்வேறு பகுதிகள் விருத்தி அடைகின்றது. உதாரணமாக பேச்சு, புத்திக் கூர்மை, கணிதம், சங்கீதம், நடனம் போன்றவை. மூளையில் சமூகத் தொடர்பாடல் திறன் அபிவிருத்தியில் ஏற்படும் குறைபாடானது மற்றைய பகுதிகளின் வளர்ச்சியை பாதிக்கக்கூடும்.

Autism (ஓட்டிசம்) நிலைமையால் பாதிக்கப்பட்ட சிலர் சாதாரண சிறுவர்களைப் போலவும் வேறு சிலர் அசாதாரண மானவர்களாகவும் காணப்படுவர். அதாவது இந்நிலையின் குணாதிசயங்கள் சிலரில் சிறிதளவிலும் வேறு சிலரில் பாரிய அளவிலும் காணப்படலாம். இது பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளிடையே கூடுதலாக ஏற்படுகின்றது.

**ஏன் நமக்கு இந்நிலை பற்றி தெளிவு வேண்டும்?**

Autism (ஓட்டிசம்) தற்போது உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது. எனவே எமது பிள்ளைகளிடையே ஓட்டிசம் காணப்படுமாயின் அதைக் குழந்தைப் பராயத்திலேயே அடையாளங் காண்பதனால் தகுந்த பயிற்சி வழங்குவதன் மூலம் சிறந்த பலனை அடையலாம்.

**Autism எனும் நிலையில் காணப்படும் அறிகுறிகள் யாவை?**

Autism உள்ள சிறுவர்களின் சமூகத் தொடர்பாடல் திறன் குறைவாக இருப்பதால், இவர்கள் மற்றயவர்களின் கண்களைப் பார்த்து கதைக்கவும் அவர்களின் சைகைகளைப் பார்த்து விளங்கிக் கொள்ளவும் கஷ்டப்படுவார்கள். மற்றையவர்களின் மனதையும் அவர்களின் உணர்வுகளையும் அறிந்து கொள்வதும் இவர்களுக்கு கடினம். இதனால் நண்பர்களை உருவாக்குவதிலும் அவர்களுடன் நட்புறவுடன் தொடர்ந்து பழகுவதிலும் கஷ்டங்களை அனுபவிப்பார்கள்.

இலங்கையில் உள்ள பெரும்பாலான சிறுவர்கள் பேச்சு விருத்தியில் தாமதத்துடன் வைத்திய சாலைக்கு வருகை தருகின்றனர். சிலர் பேச ஆரம்பித்து மீண்டும் பேச்சு திறனை இழக்கின்றார்கள். இதனால் இவர்கள் தம்முடைய தேவைகளை வார்த்தைகளில் வர்ணிக்க சிரமப்படுவார்கள். எனவே தமது தேவைகளை நிறைவேற்ற, விரும்பத்தகாத நடத்தைகளில் ஈடுபடுகின்றார்கள். மேலும் சிலர் வன்முறைகளைக் ஃகையாளுகின்றனர்.

இவர்களுக்கு சிலவற்றில் மீட்டும் அதிகூடிய ஆர்வம் உண்டு. எனவே, இவர்கள் ஒரே விடயங்களை மீண்டும் மீண்டும் செய்வார்கள். இவர்கள் நாளாந்த செயற்பாடுகளை ஒரு ஒழுங்கு முறையில் செய்ய விரும்புவார்கள். இவற்றில் தடை ஏற்படும் போது இயைபாக்கமடையக் கஷ்டப்படுவார்கள். விளையாட்டுப் பொருட்களுடன் அர்த்தமுள்ள முறையில் விளையாடத் தெரியாத நிலை காணப்படலாம். உதாரணமாக விளையாட்டு காரை உருட்டி விளையாடாமல் காரின் சில்லுடன் மட்டுமே விளையாடுவார்கள். விளையாட்டுப் பொருட்களை ஒரே வரிசையில் அடுக்குவர். தொடுகை, சத்தம், பார்வை, மணம் போன்ற உணர்வுகளுக்கு அதிகூடிய உணர்ச்சியை அல்லது உணர முடியாத நிலைமையைக் கொண்டிருப்பர். இவர்களுக்கு மேற்படி உணர்வுகளை சாதாரணமானவர்களைப்போல அனுபவிக்க முடியாது.

**Autism உள்ள சிறுவர்களை எவ்வாறு குழந்தைப் பராயத்திலேயே அடையாளங் காண்பது?**

குழந்தையின் ஆறு மாதங்கள் மட்டும் சிரிப்பையோ மகிழ்வை வெளிப்படுத்தும் சைகைகளையோ காட்ட முடியாது இருத்தல்.

12 மாதத்தில் விருப்பமான பொருட்களை சுட்டிக்காட்ட முடியமை.

Bye போன்ற சைகைகளைக் காட்ட முடியாமை.

16 மாதத்தில் ஒரு அர்த்தமுள்ள சொல்லையாவது கூற முடியாமை.

24 மாதத்தில் இரண்டு சொற்களை சேர்த்துக் கதைக்க முடியாதிருத்தல்.

பெயர் கூப்பிடும் போது திரும்பிப் பார்க்காது இருத்தல்.

பெற்ற பேச்சுத்திறன்களை இழத்தல்.

மற்றையவர்களின் கண்களைப் பார்த்துக் கதைக்க முடியாமை.

தமக்கு விருப்பமான பொருட்களை மற்றவர்களுக்குக் காட்டி தமது ஆர்வத்தை மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாமை.

ஒரு விளையாட்டுப் பொருளுடன் மட்டுமே மீண்டும் மீண்டும் விளையாடுதல்.

**ஒரு பிள்ளைக்கு Autism என சந்தேகித்தால் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும்?**

சிறுவர் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டில் (Child Health Developmental Record/ அம்மா காட்டில்) உள்ள மேற்படி வளர்ச்சிப் படி நிலைகளை குழந்தை உரியகாலத்தில் அடையாத போது குடும்பநல உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தி வைத்தியரின் (MOH) அறிவுரையைப் பெறலாம். குழந்தை வைத்திய நிபுணரிடமோ அல்லது உள மருத்துவ நிபுணரிடமோ அல்லது குழந்தை மற்றும் கட்டிளமைப் பருவத்தில் தேர்ச்சி பெற்ற உளவைத்திய நிபுணரிடமோ பிள்ளையைக் காட்டுவது சிறந்தது. யாழ்ப்பாணத்தில் "மாதவம்" என்ற நிறுவனத்திலும் இவர்களின் உதவியைப் பெறலாம்.

**Autism உள்ள சிறுவர்களுக்கு எவ்வகையான சிகிச்சை வழங்கப்படுகின்றது?**

Autism நிலைக்கு விசேடமான மருந்துகள் எதுவும் இல்லை. மற்றைய சிறுவர்களைப் போல இவர்களின் மூளைக்குச் சமூகத் தொடர்பாடல் திறன் விருத்திக்குரிய சமிக்ஞைகள் தானாகச் செல்வதில்லை. எனவே, நாம் சமூகத் தொடர்பாடல் சமிக்ஞைகளை மூளைக்கு வெளியில் இருந்து அதாவது சூழலில் இருந்து வழங்க வேண்டும். இதை எவ்வாறு பிள்ளைகளுக்கு விளையாட்டின் மூலம் வழங்குவது என்பது பற்றி தொழில் வழிச்சிகிச்சை பிரிவினர் உதவி செய்கின்றனர். அவதானத்தை ஈர்ப்பதற்கும் கண்களைப் பார்த்துக் கதைப்பதற்கும் சேர்ந்து விளையாடுவதற்கும் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது. பேச்சுத்தாமதத்தைசரிசெய்ய பேச்சுப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இவற்றை தாய் அல்லது தந்தை கற்றறிந்து அவற்றை வீட்டில் கிழமையில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் ஒவ்வொரு நாளும் நான்கு மணித்தியாலங்களாவது முறையாகச் செய்து வந்தால் ஒருவருடத்தில் பாரிய முன்னேற்றத்தைக் காண முடியும் என ஆய்வுகள் சான்றுரைக்கின்றன. புத்திக்கூர்மை வளர்ச்சி மற்றும் ஐந்து வயதில் குழந்தை பேசும் அளவு என்பன எதிர்கால கல்வி, தொழில் வாய்ப்பு. சமூக வாழ்க்கை, திருமண வாழ்வு என்பவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். இதனால் தான் இவர்களை சிறுபராயத்தில் அடையாளங்கண்டு உடனடியாக சிகிச்சையைத் தொடங்க வேண்டும். இதற்காக அரச நிறுவனங்களில் இப் பெற்றோருக்கு ஒருவருட விசேட விடுமுறை வழங்கப்படுகின்றது.

Autism உள்ள சிறுவர்களிடையே நடத்தைப் பிரச்சனைகள், நித்திரைக் குழப்பம், உண்பதில் பிரச்சினை, மலச்சிக்கல்கள், அதிக துடியாட்டம், மனச்சோர்வு, பதகளிப்பு, [illegible] சம்பந்தமான நோய்கள், வலிப்பு போன்றன ஏற்படலாம். மேற்படிப் பிரச்சனைகள் காணப்படுகிறதா என வைத்தியர் பார்த்துக் கண்டறிந்து உரிய சிகிச்சையை வழங்குவர்.

நடத்தைப் பிரச்சினைகள் காணப்படும் போது, சிறுவர்களின் சரியான நடத்தைகளை பாராட்டுவதன் மூலம் அவற்றை அதிகரிக்க முடியும். விரும்பத்தகாத நடத்தைகளின் மூலம் இவர்கள் அவதானத்தை ஈர்க்க முயற்சிப்பதால் இவர்களை கவனிக்காது இருப்பதன் மூலம் அத்தகைய விரும்பத்தகாத நடத்தைகளைக் குறைக்கலாம்.

**Autism உள்ள சிறுவர்களுக்கு தொலைக்காட்சி, mobile phone, ipad, tab போன்றவற்றை உபயோகிக்க வழங்குவது உகந்ததா?**

எந்தக் குழந்தைக்கும் இரண்டு வயது மட்டும் தொலைக்காட்சி, mobil phone, ipad, tab போன்றவற்றை பாவனைக்குக் கொடுக்க வேண் டாம் என உலக சுகாதார நிறுவனமும் American Academy of paediatricians உம் அறிவுறுத்துகின்றன. இரண்டு முதல் ஐந்து வயது வரையில் நாளொன்றுக்கு 1 மணித்தியாலத்திற்குக் கூடாமல் மட்டுப்படுத்திய அளவிலேயே இவற்றை வழங்க முடியும்.

மேற்படிச் சாதனங்கள் மூலம் பெரும்பாலும் ஒரு வழிச் செய்தியை மட்டுமே வழங்க முடியும். தொடர்பாடல் என்பது இருவர் தமது எண்ணங்களைப்பகிர்ந்து கொள்வது. Autism உள்ள சிறுவர்களுக்கு சமூகத் தொடர்பாடல் திறனில் இயல்பாகவே குறைபாடு காணப்படுவதனால் மேற்படிச்சாதனங்களின் பயன்பாடு அவர்களின் மூளை விருத்தியை மேலும் பாதிக்கக்கூடும். எனவே குழந்தையில் பேச்சுத் தாமதம் காணப்படும்போது தொலைக்காட்சி, mobil phone, ipad, tab போன்றவற்றை வழங்காமல், பிள்ளைகளுடன் காலத்தைச் செலவழித்து முழுக் கவனத்தையும் அவர்களுக்கு வழங்கி விளையாடுவது சாலச்சிறந்தது.




சர்வதேச ஓட்டிச வாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

**Autism உள்ள சிறுவர்கள் சாதாரண பாடசாலையில் கல்வி கற்க முடியுமா?**

பெரும்பாலும் இவர்களை சாதாரண பாடசாலை மாணவர்களுடன் உள்வாங்க முயற்சி எடுக்க வேண்டும். இதன்மூலம் இவர்கள் சமூகத் தொடர்பாடல் திறன்களையும் வாழ்க்கைக்குரிய அனுபவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். பெற்றோரோ அல்லது பிரத்தியேக ஆசிரியரோ வகுப்பறையில் பிள்ளையுடன் இருந்து மேலும் வழி காட்டலாம். Autism மிகவும் கூடுதலான அளவில் காணப்படும்போது, விசேட பாடசாலையில் இவர்கள் கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன்களைப் பயில முடியும்.

**Autism உள்ள சிறுவர்களைப் பராமரிக்கும் பெற்றோருக்கான செய்தி**

தமது குழந்தை வளர்ப்பில் ஏற்பட்ட பிரச்சினையால் உண்டான பாதிப்பினால் Autism நிலைமை உருவாகவில்லை. இது பரம்பரை அலகினாலும் சூழலியல் காரணிகளாலும் ஏற்படுகின்றது. எனவே பெற்றோர் குற்ற மனப்பாங்கை முதலில் களைதல் வேண்டும்.

Autism உள்ள சிறுவர்களைப் பராமரிக்கும் பெற்றோர், தமது உள நலத்தைச் சரிவரப் பேண வேண்டும். இவர்கள் மகிழ்வுடன் இருக்கும்போது தான் தமது பிள்ளைகளை உற்சாகமாக சிகிச்சைக்கு உட்படுத்தி வளர்ச்சிக்குத் தகுந்த சூழலை வழங்க முடியும்.

Autism உள்ள சிறுவர்களை உள்ளடக்கிய குடும்பங்களின் வாழ்வு பல சவால்களை உள்ளடக்கியது. பெற்றோருக்கு வாழ்வை எதிர்கொள்ள சக்தி இல்லாமல் போகும்போது தமது சிறார்களைப் போன்ற குழந்தைகளை உடைய பெற்றோரை சந்தித்து அவர்கள் எவ்வாறு இவ் வகையான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர் எனக் கண்டறியலாம். மேலும் அவர்கள் உங்களை ஊக்குவிப்பார்கள். இதன்மூலம் புத்துணர்வை பெற முடியும். நீங்கள் மனச்சோர்வுடனும் கவலையுடனும் காணப்படுகின்றீர்களெனில், உள மருத்துவ நிபுணரின் உதவியைப் பெறலாம்.

உங்களுக்கு வேறு பிள்ளைகள் காணப்படின், அவர்களுடனும் உங்களது நேரத்தை செலவழிக் வேண்டியது மிகவும் முக்கியமானதொன்றாகும். இல்லாவிட்டால் எனது பெற்றோர் என்னில் விருப்பமில்லை என எண்ணி இவர்கள் பிழையான வழியிலும் பிழையான நண்பர்களுடனும் சேரக் கூடும்.

Dr. மடோனாகஷந்தி ஸ்ரீஸ்கந்தராஜா
குழந்தை மற்றும் கட்டிளமைப்பருவ
உள வைத்திய சிரேஷ்டப் பதிவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 147





அப்படிச் சேர்க்கப்பட்ட இரு கட்டடங்களும் ஒருவிதத்தில் மாறுபட்டிருந்தன.

வலது புறத்து மாளிகை அதன் உள்ளே சுடர் விட்டு எரிந்த பல தீபங்களினால் ஜொலித்துக் கொண்டிருந்தது. உள்ளிருந்து பலவித கலகலப்பான தொனிகள் வந்து கொண்டிருந்தன. இடதுபுறத்துக் கட்டடத்திலோ, ஒரு சின்னஞ் சிறு தீபம் கூட எரியவில்லை. நிலா வெளிச்சத்தில் அதன் வெளிச்சுவர்கள் நெடிதுயர்ந்து தெரிந்தன.

ஆனால் அந்த மாளிகையின் உள்ளே நிசப்தமும் இருளும் குடிகொண்டிருந்தன.

வந்தியத்தேவனை அழைத்துக் கொண்டு வந்த பெண், லதா மண்டபத்தை அணுகியதும் அவனைப் பார்த்துச் சமிக்ஞையினால் அங்கேயே நிற்கும்படி சொன்னாள். அவனும் அப்படியே நின்றான். அவ்விதம் நின்றபோது தான் அந்த இடத்தில் நிறைந்திருந்த மலர்களின் நறுமணத்தை அவன் உணர்ந்தான். அப்பப்பா! என்ன வாசம்! என்ன வாசம்! மூக்கில் நெடி போல ஏறித் தலையைக் கிறுகிறுக்க அடிக்கிறதே!

அந்தப் பெண் லதா மண்டபத்துக்குள் நுழைந்ததும், அவளுடைய குரலும் இன்னொரு இனிய பெண் குரலும் கேட்டன. "வரச் சொல் உடனே! கேட்பானேன்? நான்தான் இத்தனை நேரமாய்க் காத்திருக்கிறேன் என்று தெரியுமே?" என்ற சொற்கள் அவனுக்கு மயக்கத்தை உண்டாக்கின. அந்தக் குரல் பழுவூர் இளையராணியின் குரல்தான்! சந்தேகமில்லை! அடுத்த கணம் அவள் முன்னால் போய் நிற்கப் போகிறோம்.

அந்த நிலைமையை எவ்விதம் சமாளிக்கப் போகிறோம்? எதிர்பார்த்த மந்திரவாதிக்குப் பதிலாகப் பல்லக்கில் வந்து மோதிய மனிதன் வந்து நிற்பதைக் கண்டு அவள் என்ன நினைப்பாள்? ஆச்சரியப்படுவாளா? கோபம் கொள்வாளா? ஒரு வேளை மகிழ்ச்சி அடைவாளா? அல்லது எவ்வித உணர்ச்சியையும் வெளியில் காட்டாமல் நடந்து கொள்வாளா?

அவனை அழைத்து வந்த மங்கை லதா மண்டபத்து வாசலில் நின்றபடி சமிக்ஞையால் அழைத்தாள்.

வந்தியத்தேவன் அவள் நின்ற இடத்தை அடைந்து மண்டபத்தின் உட்புறம் நோக்கினான். ஒரு நொடிப் பொழுதில் அங்கே தோன்றிய காட்சி அவன் கண் வழியாக மனத்தில் பதிந்தது. தங்க விளக்கு ஸ்தம்பத்தில் ஒளிர்ந்த தீபச் சுடர் பொன் ஒளியைப் பரப்பியது. ஏதோ ஓர் அபூர்வமான வாசனைத் தைலத்தை அந்த விளக்கில் விட்டிருக்க வேண்டும். ஆதலின் தீபச் சுடரின் புகை கமகமவென்று மணம் வீசிற்று. பல வர்ண நறுமண மலர்களைப் பரப்பிய சப்ரகூட மஞ்சத்தில் ஒரு பெண் ஒய்யாரமாக சாய்ந்து கொண்டு வீற்றிருந்தாள்.

அவள் பழுவூர் இளையராணிதான். பகலில் பல்லக்கில் பார்த்த போது அவள் அழகியாகத் தோன்றினாள். இரவில் தங்கக் குத்து விளக்கின் வெளிச்சத்தில் அழகென்னும் தெய்வமே உருவெடுத்தது போலக் காணப்பட்டாள். மலரின் மணமும் விளக்கின் புகை மணமும் பழுவூர் இளையராணியின் மோகன உருவமும் சேர்ந்து வந்தியத்தேவனைப் போதை கொள்ளச் செய்தன.

வந்தியத்தேவா! ஜாக்கிரதை! ஒரே ஒரு தடவை நீ மதுபானம் செய்தாய்! உன் அறிவு கலங்குவதை அறிந்தாய்! பிறகு மதுவைத் தொடுவதில்லை என்று சபதம் செய்தாய்! இப்போது அதை ஞாபகப்படுத்திக்கொள்! மதுவின் போதையைக் காட்டிலும் சக்தி வாய்ந்த இந்த மயக்கத்தில் உன் அறிவைப் பறிகொடுத்துவிடாதே!

வந்தியத்தேவனைப் பார்த்த பழுவூர் இளையராணி நந்தினி. அவளுடைய பவழ இதழ்கள் சிறிது விரிந்து முத்துப் பற்களை வெளிக் காட்டும்படி வியப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மந்திர புல்லாங்குழல்



ஆனைக்குடி என்ற ஊரில் அழகேசன் என்ற ஏழை இளைஞன் இருந்தார், அவர் பக்கத்து ஊரில் ஜம்பு என்ற ஜமிந்தாரிடம் வேலை பார்த்து வந்தார், கடுமையாக உழைத்தாலும் ஜமிந்தார் ஒன்றுமே கொடுக்க மாட்டார், சாப்பாடு மட்டுமே போடுவார். இருந்தாலும் தனக்கு வேலை கொடுத்த ஜமிந்தாருக்கு மிகவும் உண்மையாக உழைத்தார், ஜமிந்தார் கொடுப்பதில் தன் தாயாருக்கு பொருட்கள் வாங்கி கொடுத்து அனுப்புவார்.

இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்து, பின்னர் தன் தாயை பார்க்க போவதாக ஜமிந்தாரிடம் சொன்னார் அழகேசன். ஜமிந்தாருக்கு அவரை விட மனசு இல்லை, இருந்தாலும் போய் வா, இதோ இரண்டு ஆண்டுக்கான உன் கூலி என்று கூறி 5 செப்பு காசுகள் கொடுத்தார்.

அவரும் மனம் கோணாமல் தாயாரைப் பார்க்க போகிற மகிழ்ச்சியில் சந்தோசமாக வாங்கி, முதலாளிக்கு நன்றி சொல்லிட்டு ஊருக்கு கிளம்பினார். அதேநேரம் அந்த ஊரில் ஒரு பெரிய திருடன் ஒருவன், ஜம்பு ஜமிந்தாரின் வீட்டை ரொம்ப நாட்களாக நோட்டம் போட்டுட்டு வந்தான். அழகேசன் இருந்தவரை அவனால் திருட முடியவில்லை, அழகேசன் ஊருக்கு கிளம்புவதையும், அவர் சம்பளம் வாங்கி சென்றதையும் பார்த்தான், கண்டிப்பாக நிறைய தங்கம் கொண்டு செல்வார் என்று நினைத்தான், அதற்கு முன்னர் ஜமிந்தார் வெளியே சென்ற நேரம் பார்த்து அவரது வீட்டில் யாருக்கும் தெரியாமல் நுழைந்து, அங்கே பாதுகாப்பாக வைத்திருந்த தங்கக் காசுகள், நகைகள் மற்றும் அனைத்து ஆபரணங்களையும் கொள்ளை அடித்து, பெரிய மூட்டை கட்டினான்.

பேராசை யாரை விட்டது, இது போதாது என்று நினைத்து, அழகேசன் கையில் இருக்கும் பொருட்களையும் பிடுங்க திட்டமிட்டான், எப்படியும் அழகேசன் காட்டு வழியாகத் தான் நடந்து ஊருக்கு செல்வார், எனவே அவரை அங்கேயே மடக்கி, இருப்பதை திருடலாம் என்று நினைத்தான். குறுக்கு பாதையில் ஓடி காட்டில் ஒளிந்து கொண்டான்.

அழகேசன் காட்டு வழியாக செல்லும் போது ஒரு இடத்தில் ஒரு குள்ளமான ஒருவர் கீழே விழுந்து கிடந்தார், அவரை ஓடிப் போய் தூக்கி, குடிக்கத் தண்ணீர் கொடுத்தார். சிறிது நேரத்தில் அந்த குள்ள மனிதர் கண் விழித்து பார்த்தார், அவரது தோற்றம் வேடிக்கையாக இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். ~ *விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆலயங்கள் மீதான வழக்குகளை மீளப்பெற்று அறம் காக்குக!

தமிழ் பக்தி மொழி. அதனாலேயே என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்றார் திருமூலர்.

அதேபோல தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் என்கிறார் நாவுக்கரசர்.

ஆக, தமிழ் மொழி பக்தியின் கருவூலமாக விளங்குவது புரிதற்குரியது.

அதாவது நாயன்மார்கள் அருளிய பன்னிரு திருமுறைகள், ஆழ்வார்கள் அருளிய திவ்ய பிரபந்தங்கள், தமிழ்ப் புலவர்கள் தந்த புராண இதிகாசங்கள், சித்தர்கள் அருளிய சித்த மருத்துவ வாகடங்கள், தொல்காப்பியம், நிகண்டு என அத்தனையும் நம் தமிழ் மொழியை பக்தியின் ஊற்றாகப் படைத்தருளின.

இந்த அடிப்படையிலேயே ஆலய நிர்வாகிகளை ஆலய அறங்காவலர்கள் என்று நம் தமிழ் மொழி போற்றியது.

அதாவது ஆலயங்கள் என்பன தனித்து வழிபாட்டுக்கு மட்டுமான தலங்களன்று. மாறாக அறப்பணி செய்வதற்குமானவை.

குறிப்பாக அன்னதானம், பூதானம், கல்வித்தானம் என தம்மால் முடிந்த அறங்களை ஆலயங்கள் செய்ய வேண்டும்.

அதேநேரம் பாவபுண்ணியக் கருத்துக்கள், மறுபிறப்பு, கன்மவினை, பாவபழி, ஊழ்வினை வந்துறுத்தும் என்ற நம்பிக்கைகளினூடு பிறர்க்குத் தீங்கு செய்யாமல் இருப்பது, பிறரின் சொத்துக்களுக்கு ஆசைப்படாமல் - அபகரிக்காமல் வாழ்வது, கடவுள் மீது சத்தியம் செய்து பிணக்குகளைத் தீர்ப்பது என்றவாறான தர்ம வாழ்வை ஆலயங்கள் உருவாக்க வேண்டும் என்பதாலேயே ஆலய நிர்வாகிகளை அறங்காவலர்கள் என்று நம் தமிழ் மொழி உன்னதப்படுத்தியது.

ஆனால் இன்று ஒரு சில ஆலயங்களைத் தவிர, ஏனைய ஆலயங்கள் அறங்காவல் செய்வதில்லை.

மாறாக, கோயில் உரிமை தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து ஆலயங்களை நீதிமன்றங்களில் நிறுத்துகின்ற மிகப்பெரும் பழிபாவச் செயலை செய்து நிற்கின்றனர்.

என்ன செய்வது ஒரு காலத்தில் ஆலயங்கள் நீதிமன்றங்களாக இயங்கின.

அங்கு வீற்றிருக்கும் இறைவனே நீதியரசர். அவர் முன்னிலையில் கற்பூரம் ஏற்றி அதனை அணைத்து சத்தியம் செய்வதோடு அந்தப் பிணக்கு அந்த இடத்திலேயே தீர்க்கப்பட்டுவிடும்.

இவ்வாறு நீதிமன்றமாக விளங்கிய சைவ ஆலயங்கள் இன்று நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளன எனும் போது அதைவிட்ட பெரும் பாவச் செயல் வேறு எதுவாக இருக்க முடியும்.

ஆகையால் அன்புக்குரிய அறங்காவலர்களே! பொதுமக்களே! ஆலயங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் ஏதேனும் வழக்குகள் இருந்தால் அவற்றை உடனடியாக மீளப்பெறுங்கள். அறம் காக்க வேண்டிய ஆலயங்களை நீதிமன்றங்களில் நிறுத்தி அவற்றின் மகிமைக்கு மாசு ஏற்படுத்தி விடாதீர்கள்.

எனக்குரியதில்லையா? என்று கேளாதீர்கள். உங்களுக்கு உரியதாயின் அது என்றோ ஒருநாள் தானாக வந்துசேரும்.

ஆம், மரணம் நமக்காகக் காத்திருக்கும் போது வெற்றியும் தோல்வியும் நமக்கேது.

ஆகையால் உங்களை மன்றாட்டமாகக் கேட்கின்றோம். சைவ ஆலயங்களை நீதிமன்றில் நிறுத்தாதீர்கள்.

## சமுர்த்தி கொடுப்பனவு என தெரிவித்து அச்சுவேலியில் தனிமையிலிருந்த பெண்ணிடம் பணம் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வளலாயில் சமுர்த்திக் கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதாக தெரிவித்து தனிமையில் இருந்த விசேட தேவையுடைய தையல் தைக்கும் பெண்ணிடம் இனந்தெரியாத ஒருவரால் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் மோட்டார் சைக்கிளில் வருகை தந்த நபர் ஒருவர் கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவிலிருந்து வருகை தந்துள்ளதாக தெரிவித்து தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குறித்த பெண்ணிடம் அடுத்துவரும் மாதங்களில் அரசாங்கம் ஐயாயிரம் ரூபாய் சமுர்த்தி கொடுப்பனவை பத்தாயிரம் ரூபாயாக அதிகரித்து வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே அதற்காக தாம் ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிகளிடமிருந்தும் 20 ஆயிரம் ரூபாய் பணத்தினை அறவிடுகிறோம் என தெரிவித்து நான்கு படிவங்களைக் கொடுத்து அதில் கையொப்பமிட்டு வழங்குமாறு கூறி அவரிடம் இருந்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்றுள்ளார்.

தன்னிடம் தற்போது அவ்வளவு தொகை பணம் இல்லை அயலிலுள்ளவர்களிடம் பெற்றுத் தான் வழங்க வேண்டும் என வயதான பெண் தெரிவித்த போதிலும் பணம் உடனடியாக வழங்காவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என தெரிவித்து வலுக்கட்டாயமாக குறித்த பணத்தினை பெற்றுள்ளார்.

பணத்தினை பறிகொடுத்த பெண் தனிமையில் இருந்த நிலையிலே வந்திருப்பவர் முகக்கவசத்தினை அணிந்தவாறு உடனடியாக பணத்தை வழங்க வேண்டும் என்று கடுந்தொனியில் தெரிவித்ததால் தனக்கு இது மோசடி என சந்தேகம் ஏற்பட்ட போதிலும் பணத்தை வழங்காவிட்டால் தனது உயிருக்கு ஏதேனும் விபரீதம் நிகழலாம் என்ற அச்சத்தினால் பணத்தை வழங்கிவிட்டு தொலைபேசி ஊடாக அயலவர்களுக்கு தெரிவிக்கலாம் என முயற்சித்த போது தனது சிமாட் கையடக்க தொலைபேசி ஒன்றும் அங்கிருந்து களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தொலைபேசி களவாடப்பட்டமை தொடர்பாகவும் டயலொக் தொலைபேசி நிறுவனத்திற்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் அதேவேளை கடந்த வாரம் நீர்வேலி பகுதியிலும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவாகியுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்திலிருந்து பதிவினை மேற்கொள்ள வருவதாக தெரிவித்து பல பண மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

எனவே இவ்விடயம் தொடர்பில் பொதுமக்களை மிக அவதானமாக இருக்குமாறு பிரதேச செயலர் மற்றும் கிராம சேவையாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(ம-7,9,33)

## கடற்றொழிலாளர்களை பாதுகாக்க ஒத்துழையுங்கள் சர்வதேச அமைப்புக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(கொழும்பு)

சிறு கடற்றொழிலாளர்களை பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்கு தன்னால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் சிறு கடற்றொழிலாளர்களை பாதுகாப்பது தொடர்பான ஆய்வு அறிக்கையின் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சரினால் மேற்குறித்த அழைப்பு விடுக்கப்பட்டது.

தேசிய மீனவர் ஒற்றுமை அமைப்பு, உலகளாவிய மூலோபாய வரைபிற்கான ஆலோசனைக் குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புக்களின் முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையின் அறிமுகநிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இலங்கையில் சுமார் 200,000 சிறு கடற்றொழிலாளர்கள் இருக்கின்ற நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாப்பதற்கும் வாழ்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் கடற்றொழில் அமைச்சு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது.

இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்து சட்டவிரோத தொழிலான இழுவை மடிவலை தொழிலை மேற்கொள்வதால் இலங்கையின் சிறுதொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தினை சுமுகமாக தீர்ப்பதற்கு இராஜ தந்திர ரீதியாகவும் சட்டரீதியாகவும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன் என்றார்.

(ம-7,9)

## இன்றும் நாளையும் உரம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட இதுவரை இலவச ரி.எஸ்.பி உரம் பெறாத நெற்செய்கையாளர்கள் இன்று வெள்ளி நாளை சனிக்கிழமை உரத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட சகல கமக்கார அமைப்புக்களையும் சேர்ந்த கடந்த வருடம் செய்கை மேற்கொண்ட நெற்செய்கையாளர்கள் குறித்த தினத்தில் உரிய ஆவணங்களுடன் கமநல சேவை நிலையத்திற்கு சென்று உரத்தினை பெற முடியும்

(ம-7,9,30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** பிரிட்டிஷ் கவுன்சில், இயற்கை விஞ்ஞானபீடம், தியாகி அறக்கொடை நிலையம், நியோகிறீம் ஹவுஸ், அரசடிபழம் வீதி, கைலாச பிள்ளையார் கோவில், நல்லூர் கோவில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்காவீதி, கேவில் வீதி சந்தி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்குச் சந்தி, 55 ஆம் பிரிவு இராணுவ முகாம், கட்டைக்காடு, தாளையாடி ஐஸ் தொழிற்சாலை, J.K.W.S.S.P.Site office தாளையடி, ஆழியவளை, செம்பியன் பற்று, கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் (55 ஆம்பிரிவு), கோவில் முள்ளியான், குடாரப்பு, மாமுனை, தாளையடி, நாகர் கோவில், மருதங்கேணி, நெல்லியன் இராணுவ முகாம், உடுத்துறை வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவ முகாம், வெற்றிலைக் கேணி கடற்படை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# உலக வங்கியால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்



(முறிகண்டி)

உலக வங்கியினால் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு திட்டங்களில் கிளிநொச்சி மாவட்டத்தினை உள்வாங்கி மாவட்டத்தின் தேவைகளை உள்ளடக்கியதாக மாவட்டத்திற்கான திட்டத்தினை தயாரிக்கும் உலக வங்கியின் திட்ட முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுக் காலை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் இடம் பெற்றது. இக் கலந்துரையாடலில் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் இணைய வழி செயலி ஊடாக இணைந்திருந்தார்.

இத்திட்டமானது பொருளாதாரத்தை மேம்படுத்தி, பசுமையான தாங்குதிறன் கொண்ட அபிவிருத்தியை நிலை நிறுத்தி, அதனூடாக வறிய மக்களை பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படுகிறது.

இக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், உலக வங்கியின் அதிகாரிகள், பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் மேலதிக இணைப்பாளர், மாவட்டச் செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (நி-6-100-316)



துன்னாலை தெற்கு ஜே/370 கிராம சேவகர் பிரிவில், விபத்துக்கு உள்ளாகி மாற்றுத் திறனாளியான சதீஸ்வரன் இராஜேஸ்வரி குடும்பத்தினருக்கு கனடாவை சேர்ந்த தம்பிக்க சின்னையா மற்றும் வன்னி எயிட்ஸ் நிறுவன நிதி அனுசரணையில் நான்காவது சிங்க றெஜி மென்ற் படைப்பிரிவின் ஆளணி மற்றும் கட்டுமான உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. (படம்- மகாலிங்கம், சிவசாந்தன்)

# சங்கிலி அறுப்பு தொடர்பில் பெண் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் உற்சவத்தில் பெண் ஒருவரின் தங்கச்சங்கிலி அறுப்பு தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பொங்கல் உற்சவத்தின் போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் தங்கச்சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் சந்தேக நபரான பெண் ஒருவரை கைது செய்துள்ளதுடன் இரண்டு தங்கச்சங்கிலிகளையும் மீட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-316)

# ஆக்கிரமிப்பில் இருக்கும் மணற்கேணி காணிகளை துப்புரவாக்க அனுமதி வழங்குங்கள்

## காணி உரிமையாளர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான, முல்லைத்தீவு - மணலாறு, மணற்கேணிப் பகுதிக்குரிய தமிழ் மக்கள் சிலர், மணற் கேணிப் பகுதியிலுள்ள தமது காணிகளை துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி தருமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தைக் கோரியுள்ளனர்.

அந்த வகையில் மணற் கேணிப்பகுதி காணி உரிமையாளர்கள் சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதந்து, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகசபதி கனகேஸ்வரனை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலின் போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் ஊடாக, காணி ஆவணங்களைச் சமர்ப்பித்து, காணிகளைத் துப்புரவு செய்வதற்குரிய கோரிக்கையினை மாவட்ட செயலகத்திற்கு வழங்கும்போது, அதற்குரிய அனுமதியை விரைவாக வழங்க முடியுமென முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (6)

# ஐ.நா மனித உரிமை சாசனத்திற்கு அமைய பயங்கரவாத சட்டம் இயற்றப்படவில்லை

## சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன்

(முறிகண்டி)

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பது ஐ.நா மனித உரிமை சட்டங்களிற்கோ சாசனங்களிற்கோ அமைய இயற்றப்படவில்லை என சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை பாராளுமன்றத்திற்கு தற்போது கொண்டுவருவதில்லை எனவும், தாமதிப்பதாகவும் நீதியமைச்சர் கூறியிருக்கின்றார். தற்போது அது நல்ல விடயம் என்றுதான் நாம் கூற வேண்டும்.

பல உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முதல் அச்சட்டம் இயற்றப்படும்போது மக்களின் அபிப்பிராயங்கள், சிவில் சமூகங்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், நிபுணர்கள் ஆகியோரின் அபிப்பிராயங்களையும் எடுத்துதான் சட்டத்தை இயற்ற வேண்டும்.

ஏனெனில் இலங்கை பல்வேறு ஐ.நா சாசனங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அதன் அடிப்படையில் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு கடமை இருக்கின்றது.

இந்த சாசனங்களில் உள்ள உரிமைகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமாகும்.

இவ்வாறான சட்டம் இயற்றுவதென்றால், வெளிப்படையான முறையில் நான் முன்னர் குறிப்பிட்ட அத்தனைபேரையும் இணைத்து அவர்களின் அபிப்பிராயங்களை எடுத்து சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களிற்கு ஏற்றதான ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6-100)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 160 | 300 |
| உருளைக்கிழங்கு | 130 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 300 | 400 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 150 | 200 |
| கோவா | 100 | 140 | 100 | 150 |
| கரட் | 100 | 200 | 140 | 200 |
| பூசணி | 60 | 80 | 60 | 50 |
| புடோல் | 140 | 150 | 140 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 100 | 130 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 300 |
| பீற்றூட் | 130 | 100 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 600 | 900 |
| போஞ்சி | 240 | 250 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 160 | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 250 | 350 | 280 | 280 |
| வெங்காயப்பூ | 160 | 150 | — | 400 |
| முள்ளங்கி | 50 | 100 | — | 150 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 140 |

# பட்டப்பகலில் களவாடப்பட்ட முச்சக்கரவண்டி மீட்பு


## சந்தேக நபர்கள் இருவர் கைது

(தருமபுரம்))

பட்டப்பகலில் முச்சக்கர வண்டி திருடப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேக நபர் இருவரை கைது செய்துள்ளதுடன் முச்சக்கரவண்டியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்தின் போதே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (நி-6-316)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

விலை 30 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதன் புதிய விலை 490 ரூபாயாகும்.

பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் 22 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 97 ரூபாயாகும்.

அத்துடன், கோதுமை மா ஒரு கிலோகிராம் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் 225 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. (ம-7,9)

## மின்சாரம்...

லூரியில் உயர்தரம் பயின்று வரும் கொக்குவில் குளப்பிட்டியைச் சேர்ந்த மோகனதாஸ் கிஷோத்மன் (வயது - 18) என்ற மாணவனே உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்னமுத்தியினை ஸ்விட்ச் போர்ட்டுடன் இணைக்க முற்பட்ட வேளை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

தமது கோயில் திருவிழாவை முன்னிட்டு வேட்டியை இஸ்திரி போட முற்பட்ட நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பானமரணவிசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9)

## 40 எரிபொருள்...

தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய களஞ்சிய முனைய அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திடமுள்ள அனைத்து எரிபொருள் பௌசர்களையும் GPS கருவியூடாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ம-7,9)

## பாணின்...

குறைக்கப்படவுள்ளதாக கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

இன்று காலையில் இருந்து 10 ரூபாய் விலைக்குறைப்பு நடைமுறைக்கு வரும் என அவர் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது என ஊடகங்களில் வெளியான செய்திகளை அடுத்து கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் அதிரடியாக பாணின் விலையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் கோதுமை மா, நல்லெண்ணெய் மற்றும் முட்டையின் விலை குறையும் பட்சத்தில், பேக்கரி பொருட்களின் விலையை குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ள நிலையில், கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (ம-7,9,33,104)

## திருமலையில்...

திருகோணமலை, திருக்கடலூர் மற்றும் விஜிதபுர மீனவர்களிடையே நேற்று மதியம் பாரிய மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது

பெரும்பான்மை இனத்தவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கடற்பரப்பில் சிறுபான்மையினத்தவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவித்து அப்பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த மோதலைக் கட்டுப்படுத்துவதற்கு அப்பகுதியில் பெருமளவிலான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த மோதல் சம்பவத்தில் 6 பேர் ப்டுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,9)

## ஊழல்...

- தவறுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களை வெளிக்கொணர்வதும் விசாரணை செய்வதும் இந்த சட்டமூலத்தின் பிரதான இலக்காகும்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெறுவதாக இருந்தால்

## எழுத்துமூலம் அறிவியுங்கள் - சஜித்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெறுவதாக இருந்தால் அதை எழுத்துபூர்வமாக அறிவியுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு விசேட கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்களின் எதிர்ப்பை கருத்திற் கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெற முடிவு எடுக்கப்பட்டாலும், குறித்த அந்த முடிவில் தனக்கு நம்பிக்கை இல்லை எனவும், இதற்கு முன்னரும் மக்களால் எதிர்க்கப்பட்ட சட்டமூலங்களை அரசாங்கம் வாபஸ் பெற்றாலும், பின்னர் தமது பெரும்பான்மையை பயன்படுத்தி நிறைவேற்றிக் கொண்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம் இந்த பயங்கரவாத சட்டத்தை வாபஸ் பெறுவதாக இருந்தால், அது தொடர்பில் தெளிவான எழுத்துமூல அறிவிப்பை வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

இதனால் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மனித உரிமைகள் கூட மீறப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7,9)

இதனுடன் தொடர்புடைய வகையில் சுயாதீன ஆணைக்குழுவொன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது. (ம-7,9)



சென்னையில் நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டபோது...

## ஆட்சி...

மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் தேர்தல் ஒன்றை மகிழ்ச்சியாக எதிர்நோக்கியிருந்தனர்.

தங்கள் மீதான குற்றச் சாட்டுக்களை தேர்தல் மேடைகளில் மூடி மறைப்பதற்காக தேர்தலை எதிர்நோக்குவார்கள்.

எனினும் தற்போது அந்த நிலை மாறியுள்ளது.

தங்களுடைய வாக்குகள் தங்களுக்கு எதிராகவே மாறியுள்ளதை ஆட்சியாளர்கள் அறிந்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7,9)


**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 06/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1537
கடகம் 4 5 9 4 8 1
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
திகதி - 2023.04.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1112
W 44 53 65 77
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

**கொவிசெத**
திகதி 2023.04.06 / சீட்டிழுப்பு இலக்கம் 3324
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Z 05 08 43 67
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 06/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1430
A 02 20 21 39 47

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.06
சீட்டிழுப்பு இலக்கம் 391
ரிஷபம் 21 26 49 61 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2023/04/06
சீட்டிழுப்பு இலக்கம் 5082
A 9 0 1 2 3 6
தேசிய லொத்தர் சபை

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 2057 / நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.04.06 / தினம் வியாழக்கிழமை
G 16 21 29 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,660,320/-
DLB www.dlb.lk

**சனிதா**
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.06
சீட்டிழுப்பு இல : 4218
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,789,240/-
வெற்றி இலக்கங்கள் 03 10 38 54 M
DLB

**ராசி அதிர்ஷ்டம்**
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,360,818.60
திகதி 2023-04-06
வெற்றி வாரம் 3769
வர்ணம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 12 23 44 52
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,817,020/-
DLB

**கப்ருக**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 28 15 25 34 44
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1233
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.04.06 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 319,631,299.80
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

**සංවර්ධන වාසනාව**
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 585 / திகதி 2023-04-06 / வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து J / வெற்றி இலக்கங்கள் 36 42 70 / விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 18,807,964/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**அத கோடிபதி ADA KOTIPATHI**
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1883
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,995,900/-
வெற்றி இலக்கங்கள் 04 08 50 53 C
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

மீசாலையில் இயங்கும் மருந்தகத்திற்கு மருந்தக உதவியாளர் தேவை. மருந்து தொடர்பான முன் அனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (15169)

**077 711 0990, 077 711 0329, 021 221 0777**

## பதவி வெற்றிடம்

- ஒப்பு நோக்குநர் (பெண்கள்)
- தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் (பெண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)

**தகைமை :** க.பொ.த உயர் தரம் கற்றிருத்தல்
வயது - 24 இற்கு மேல்
**குறிப்பு :** ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

**076 097 3121**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- ⇨ A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- ⇨ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ⇨ கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- ⇨ A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15173)

**076 739 0413, 076 436 5814**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15170)

**077 814 7389, 077 986 5457**

## கொல்கத்தா வெற்றி




பெங்களூரு அணிக்கு எதிரான ஐ.பி.எல் ரி20 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா அணி 81 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

முதலில் களமிறங்கிய கொல்கத்தா அணி 205 ரன்களை பெங்களூரு அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது. பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 17.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. போட்டியின் ஆட்டநாயகனாக சர்துல் தாகூர் தெரிவானார். (ம-7)


## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் உணவுப் பொருட்களை கடைகளுக்கு விநியோகம் செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **சாரதிகள் :** கனரக சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும்
- **பொருட்களை ஏற்றி இறக்கும் உதவியாளர்கள்**

(15171)

**077 482 1969**
**Viber : 072 797 3910**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 08 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம் :**
  **காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15170)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு) 51 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15173)

**076 755 8606**
**077 638 5683**

## வேலையாட்கள் தேவை

விசா மற்றும் விமான ரிக்கட் சம்மந்தமான அனுபவம் உள்ளவர்கள் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 வரையிலான காலப் பகுதிக்குள் தங்கள் சுய விபரக்கோவையுடன் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும்.

**இல.197, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**(சின்னக்கடை சந்தைக்கு அருகாமை)** (15163)

**077 266 6429, 021 221 0599**

## தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது நிறுவனத்திற்கு வேலையாள் (Office peon)தேவை. வயது 30 க்கும் 45 ற்கும் இடையிலானவர்கள் விண்ணப்பிக்கலாம் காரியாலயத்திற்கு அண்மையில் வசிக்கும் ஒருவர் விரும்பத்தக்கது. (15168)

**077 945 0668**

## அமரர் சுந்தரம் டிவகலாலா அவர்களின் நினைவேந்தல்





**இடம் : யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபம்**
**காலம் : 08.04.2023 சனிக்கிழமை**
**நேரம் : மு.ப 9.30 - பி.ப 12.30**

**நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.** (15166)

ஆறுதல்
55/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

ஆறுதல் கழகம்
யாழ் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15173)

**076 733 6047**
**076 333 6079**
**076 799 6093**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**





**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6314)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**





- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6314)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.